| Headline | Lecturer and varsity graduate bag Merdeka Award Grant | | |
|---|---|---|---|
| MediaTitle | Tamil Nesan | | |
| Date | 24 Sep 2016 | Color | Black/white |
| Section | News | Circulation | 35,000 |
| Page No | 3 | Readership | 125,000 |
| Language | Tamil | ArticleSize | 369 cm² |
| Journalist | NULL | AdValue | RM 895 |
| Frequency | Daily | PR Value | RM 2,684 |





டான்ஸ்ரீ லக்ஷ்மணன் கிருஷ்ணன் உட்பட நால்வருக்கு

# இவ்வாண்டுக்கான மெர்டேக்கா விருது



**(செய்தி : பவித்ரா சுப்ரமணியம் படங்கள் : எஸ்.எம் சுந்தர்) கோலாலம்பூர், செப். 24-**

இவ்வாண்டுக்கான மெர்டேக்கா விருதை 4 தனிப்பட்ட பிரமுகர்கள் பெற்றனர். தங்களது துறையில் ஆற்றிய சேவைக்காக அவர்களுக்கு இந்த விருதை மேன்மை தங்கிய பேரா சுல்தானும் மெர்டேக்கா விருது அறநிறுவனத்தின் புரவலருமான சுல்தான் நஸ்ரின் முய்சுடின் ஷா வழங்கினார். மலேசிய மக்களுக்கு ஆற்றிவரும் பங்கு எண்ணெய் மற்றும் எரிவாயு தொழில் துறையின் மேம்பாட்டிற்கு ஆற்றிய தனிப்பட்ட நபர்களுக்கு பெட்ரோனாஸ் எக்சோன்மோபில், செல் ஆகிய நிறுவனங்கள் 2007ஆம் ஆண்டு மெர்டேக்கா விருதை தோற்றுவித்தன. கடுமையான தேர்வுக்குப் பின்னர் வெற்றியாளர்களின் பெயர்கள் நேற்று அறிவிக்கப்பட்டன.

**டான்ஸ்ரீ லக்ஷ்மணன் கிருஷ்ணன்**

கல்வி மற்றும் சமூகத் துறையில் ஆற்றிவரும் பங்கிற்காக டான்ஸ்ரீ லக்ஷ்மணன் கிருஷ்ணன் இந்த விருதை பெறுகிறார். நாட்டில் நவீன திரைப்படத் தொழில் துறையில் அடிப்படைத் தளத்தை ஏற்படுத்துவதை டான்ஸ்ரீ லக்ஷ்மணன் கிருஷ்ணன் முக்கியப் பங்காற்றியுள்ளார். மலேசியத் திரைப்படத் துறையில் ஓர் அடையாளமாக கருதப்பட்ட காலஞ்சென்ற பி.ரம்லி உட்பட பல கலைஞர்கள் நடிப்புத் துறையில் வளர்வதற்கு ஆற்றிய அளப்பரிய பங்கிற்காக டான்ஸ்ரீ கிருஷ்ணன் மெர்டேக்கா விருதிற்கு தேர்தெடுக்கப்பட்டார்.

**டான்ஸ்ரீ டத்தோஸ்ரீ டாக்டர் சாலே முகமட் நோர்**

மலேசியாவில் காட்டு வளம், இயற்கை சுற்றுச் சூழலை பாதுகாப்பதில் ஆற்றிய பங்கிற்காகவும் மலேசிய இயற்கை சங்கம் மற்றும் மலேசிய காட்டு வள ஆராய்சிக் கழகம் தலைமையேற்று செயல்பட்டதற்காக டான்ஸ்ரீ டத்தோஸ்ரீ டாக்டர் சாலே முகமட் நோர் மெர்டேக்கா விருதுக்கு தேர்வு செய்யப்பட்டார்.

**டத்தோ டாக்டர் லூ லாய் மெங்**

சுகாதாரம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையில் ஆற்றிய பங்கிற்காக பேராசிரியர் டத்தோ டாக்டர் லூ மாய் மெங் மெர்டேக்கா விருதைப் பெற்றார்.

**டாக்டர் வான் ரம்லி வான் டாவுட்**

மேலும், பொறியியலாளர், பேராசிரியர், டாக்டர் வான் ரம்லி வான் டாவுட்டும் இந்த விருதைப் பெறுகிறார். இவர்களுக்கு கிண்ணம் மற்றும் 5 லட்சம் வெள்ளி வெகுமதி வழங்கப்படுகிறது. இவ்வாண்டு டிசம்பர் மாதம் நடைபெறவிருக்கும் விருதளிப்பு விழாவில் இவர்கள் இந்த விருதைப் பெறுவார்கள்.

Powered by: isentia